**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.120/2023**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.11.2025 | | |
| பெயர்: | ஸ்ரீகாந்த்<br>(PW– Cross con.) | தகப்பனார் பெயர்: | ராஜேந்திரன் |
| கிராமம்: | வாடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | கட்டுமான பணி | வயது : | 33/2025 |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 24.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.01 )**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரய ஆவணத்திற்கு மூல பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 14வது பக்கத்தில் ராயர் பெயரில் பட்டா தாக்கல் செய்துள்ளேன், அந்த பட்டாவிற்கு பின்புறம் வரைபடம் இல்லை என்றால் சரிதான். எனது பெயரில் தாவா சொத்தை பட்டா மாற்றம் செய்துள்ளேன். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது பெயருக்கு மாற்றப்பட்ட வரைப்படத்துடன் கூடிய பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ்புறம் பாலகுரு வீடு உள்ளது என்றால் சரிதான். பாலகுரு வீட்டிற்கு பின்புறம் செல்வராஜின் கூறை வீடு உள்ளதா என்றால் இல்லை எனது வீட்டிற்கு பின்புறம் உள்ளது. பாலகுரு வீட்டிற்கு பின்புறம் அர்ச்சுனன் வீடு உள்ளது. அர்ச்சுனன் வீட்டிற்கு செல்வதற்கு பாலகுரு வீட்டிற்கும், எனது வீட்டிற்கு இடையில் உள்ள சந்துதான் பாதை என்றால் அங்கு பாதையே இல்லை.

அர்ச்சுனன் அவரது வீட்டிற்கு செல்ல கிழக்கு பக்கத்தில் உள்ள பாதையை பயன்படுத்துகிறார்.

3. பாலகுரு வீட்டிற்கு கிழக்கு சந்து கிடையாது வேலிதான் உள்ளது என்றால் சரியல்ல, சந்து உள்ளது. அங்கு சந்து இல்லை வேலிதான் உள்ளது என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் ராயரிடமிருந்து 95 ச.மீட்டர் கிரயம் வாங்கினேன். அந்த 95 ச.மீட்டருக்கும் நான்கெல்லை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதேபோல் எனது வழக்கு சொத்தை காட்டுவதற்குரிய புலவரைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் புலவரைப்படமும் , நான்கெல்லையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வீட்டிற்கு கதவு எண் 2/27 என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் மொத்தம் 2 வீடுகள் உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கதவு எண் இல்லைஎன்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ3 ஆவணத்தில் தாவா சொத்தின் கதவு எண் 6/98 என்று உள்ளது என்றால் அது காலணி வீட்டிற்கு உரியது. கதவு எண் 6/98 என்பது காலணி வீட்டிற்கு சொந்தமானது என்று எனது வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ, வா.சா.ஆ 1 ஆவணத்திலோ கூறவில்லை என்றால் கூறியுள்ளேன்.

5. அவ்வாறு தனிப்பட்டு கூறாமல் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது மயிலாடுதுறை நில அபகரிப்பு பிரிவில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் என்னுடைய இடத்தை அபகரிக்க முயற்சி செய்கிறார்கள் என்று கூறியிருந்தேன். வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி பிரதிவாதிகள் ஏற்கனவே தாவா சொத்தை ஆக்கிரமித்து விட்டனர் என்று 27.05.2023-ல் புகார் கொடுத்துவிட்டு தற்போது நீதிமன்றத்தில் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தில் பிரதிவாதிகள் வசத்தில்தான் காலணி வீடு உள்ளது அதை நான் உறுத்துக்கட்டளை பரிகாரம் மூலம் கோரமுடியாது என்றாலும், சுவாதீன மீட்பு பரிகாரம் மூலமாகத்தான் கோர முடியும் என்றால் சரியல்ல. நான் எனது அனுபவத்தை நிரூபிக்க நான்கெல்லை மற்றும் அளவுகளை சரியாக குறிப்பிடமால் நான் கேட்ககூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.22)**